DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.9/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சீதாராமன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | மருதை | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

2ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரிக்கு எதிராக வழக்கு தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், சேங்கல் கிராமம், மேலப்பண்ணைக்களத்தில் வசித்து வசிக்கிறேன். நான் போக்குவரத்துத்துறை இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். பட்டியல் சாட்சி 2 ஜானகி எனது அம்மா ஆவார். பட்டியல் சாட்சி 3 மங்கையர்கரசி எனது மனைவி ஆவார். 08.09.2024 அன்று நானும் எனது மனைவியும் பெட்டவாய்த்தலையில் உள்ள இளங்கோவன் மகள் திருமணத்திற்கு சென்றுவிட்டு காலை 11.00 மணியளவில் வீட்டிற்கு வந்தபோது எனது அம்மா எங்களிடம் நாங்கள் திருமணத்திற்கு சென்ற பிறகு காலை 09.30 மணியளவில் எங்கள் வீட்டு கேட் முன்பு இரண்டு ஆண் நபர்கள் வந்து என்னையும், எனது மனைவியும் எத்தனை மணிக்கு திருமணத்திற்கு சென்றார்கள் என்றும் அவர்களும் திருமணத்திற்கு செல்லவேண்டும் என்று சொல்லி எனது அம்மா காலை சுமார் 05.45 மணிக்கு நானும் எனது மனைவியும் திருமணத்திற்கு சென்று விட்டதாக அந்த இரு நபர்களிடமும் சொன்னதாகவும் இளங்கோவின் வீடு எங்குள்ளது என்று அந்த இரு நபர்கள் எனது அம்மாவிடம் கேட்டு இளங்கோ வீடு GH பக்கத்தில் இருப்பதாக எனது அம்மா சொன்னபோது அந்த இரு நபர்களும் குடிக்க தண்ணீர் கேட்டு பக்கத்தில் இருக்கும் பைப்பில்

சென்று குடிங்க என்று எனது அம்மா சொல்லியதாகவும் அவர்கள் தண்ணீர் குடித்து விட்டு வந்து எனது அம்மாவிடம் பேரன் பேத்தி யாரும் இல்லையா என்று கேட்டு வெளியூரில் இருப்பதாக சொல்லவும் பேத்தியுடன் படித்தாக அந்த நபர்கள் கூறி துடைப்பதற்கு துணி கேட்டு எனது அம்மா கட்டிலில் இருந்த துணியை எடுத்து கொடுத்த போது அந்த இருநபர்களும் எனது அம்மாவின் கைகைளை கட்டி விட்டு அதில் ஒருவர் 1/2 பவுன் தங்கத் தோடு–1, 1 கிராம் தங்கமூக்குத்தி , 1/2 பவுன் தாலி, 2 தாலிகுண்டு –1/4 பவுன் ஆகியவற்றை எனது அம்மாவிடம் இருந்து ஒருவன் கழற்றி எனது அம்மா கத்தவே மற்றொருவன் எனது அம்மாவின் வாயை பொத்தி கழற்றிச் சென்றுவிட்டதாகவும். ரோட்டில் வந்த ரவிச்சந்திரன் என்பவர் எனது அம்மாவின் கைகளை அவித்துவிட்டதாகவும் சொன்னார்.

2. எனது அம்மாவிடம் விவரம் கேட்டு மாயனூர் காவல் நிலையத்தில் எனது அம்மாவிடம் நகை பறித்தவர்கள் பற்றி புகார் கொடுத்தேன். எனது அம்மா குளித்தலை சிறைச்சாலையில் நகை பறித்தவர்களை நீதிபதி முன்பு அடையாளம் காட்டினார். என்னிடம் காட்டப்படும் புகார் காவல் நிலையத்தில் நான் கொடுத்ததுதான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் உள்ள நகைகள் நான் மனு செய்து நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் எனது அம்மாவினுடையதுதான் ஆகும். அதை நான் பெற்றுக்கொண்டேன். **நகைகள் அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் நகை பறித்தவர்களை பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. மேற்படி முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் எனக்கு நேரிடையாகத் தெரியாது எனது அம்மா சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். புகார் எட்டு மணிநேரம் தாமதமாக கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்தபோது காவல் நிலையம் போனாயா என்றால் இல்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து சுமார் ஒரு மாதத்திற்குள் விசாரித்தார்கள். விசாரணைக்கு யார்யாரேல்லாம் சென்றோம் என்றால் நான், எனது அம்மா மற்ற 2, 3 நபர்கள் வந்தார்கள். சாட்சி விசாரணைக்கு வந்த நபர்களின் பெயர் ஞாபகமில்லை.

2. இவ்வழக்கில் சாட்சியாக உள்ள ஜானகி, மங்கையர்கரசி, ரவிச்சந்திரன், சுப்பிரமணியன், சுகன்யா ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் சரிதான். இவர்களை அனைவரையும் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் ஆமாம். இவர்கள் காவல் நிலையத்தில் சாட்சி சொன்னார்கள் என்றால் சரிதான். காணாமல் போன நகைகள் எல்லாம் நான் தான் காவல்நிலையம் எடுத்துச்சென்றேன் என்றால் இல்லை. போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் தான் காவல்நிலையம் எடுத்துச்சென்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நீதிமன்றத்தில் இருந்து வாங்கிய நகைகள் உருமாற்றம் செய்யாமல் இருந்தது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டு'கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/—திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.